# இந்துமதத்தில் விலைமாதர்கள்-தேவர் அடியாள்

கட்டுரையாளர்: லண்டன் சுவாமிநாதன்,

கட்டுரை எண் 781          தேதி 8 ஜனவரி 2014

This article has been posted in English as well.

இந்துமதத்தில் இரண்டு புகழ்பெற்ற விலைமாதர்கள் கதை பலருக்கும் தெரிந்திருக்கும். ஒருவர் பெயர் பிங்களா, மற்றொருவர் பெயர் சிந்தாமணி. 1937 ஆம் ஆண்டில் எம்.கே.தியாகராஜ பாகவதரும் அஸ்வத்தம்மாவும் நடித்த தமிழ் திரைப்படம் "சிந்தாமணி" சக்கைப்போடு போட்டது. இத்தோடு ராமகிருஷ்ண பரமஹம்சர் சொன்ன விலைமாதர் கதை மிகவும் பிரபலமானது. அருணகிரிநாதர் கதையும் பலரும் அறிந்ததே. இது தவிர மதுரையில் நடந்த சம்பவம் எல்லாவற்றையும்-- ( ஐந்து கதைகளையும் ) சுருக்கி வரைகிறேன்.

**1.சேதுராம் பஜனை மண்டலி**

எனது தாய் தந்தையர் வாரம்தோறும் சனிக்கிழமைகளில் மதுரை தானப்ப முதலி தெருவில் உள்ள சேதுராம் பஜனை மண்டலிக்குப் போவார்கள். நான் எனது சகோதரர்கள், சகோதரியும் கூடப் போவோம். அதில் மிகவும் அழகாகப் பாடக்கூடியவர் XYZ. (பெயரைச் சொல்வது நாகரீகம் அல்ல). அவர் ஹார்மோனியத்துடன் பாடுவார். அவர் சொல்லும் ஒவ்வொரு சொல்லும் ஹார்மோனியத்தில் அப்படியே ஒலிக்கும்!!! தேவ கானம்.!

ஒருமுறை இரவு நேரத்தில் தீய சிந்தனைகள் வரவே, அவர் ஒரு விலைமாதர் வீ ட்டுக்குப்போனார். உள்ளே நுழைந்ததுதான் தாமதம். அந்தப் பெண்மணி இரண்டு கைகளையும் உயரே தூக்கி அவரைக் கும்பிட்டு “உங்கள் பஜனைப் பாடல்களைக் கேட்டு மெய்மறந்து போயிருக்கிறேன். நீங்கள் நன்றாகப் பாடுகிறீர்கள்” என்று சொன்னவுடன் தீய சிந்தனைகள் பறந்தோடிப் போயின. அவர் உடனே பதிலுக்குக் கும்பிடு போட்டுவிட்டுத் திரும்பினார். ஒரு நாள் பஜனை முடிந்தவுடன் இதை ஆண்கள், பெண்கள் எல்லோர் முன்னிலையிலும் சொல்லி, பாண்டுரங்கன் எல்லா இடத்திலும் நம்மைக் காப்பாற்றுவார் என்றார். சத்தியமான வார்த்தைகள்!

**2.தத்தாத்ரேயர்– ‘24 குரு’ கதை**

இவருக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரும் இதே அனுபவம் வேறு ஒருவருக்கு ஏற்பட்டது. தத்தாத்ரேயர் என்பவர் தனக்கு யார் யார் குரு என்று 24 பெயர்களைச் சொல்லுகிறார். மலைப் பாம்பு, தேனீ, குளவி, நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், யானை, மீன், தேவரடியாள் (விலைமாது) முதலிய 24 பேரிடம் என்ன கற்றுக் கொண்டேன் என்று பட்டியல் போடுகிறார். அவருக்கு வரைவின் மகளிர், இருமனப் பெண்டிர், பொருள் விழையும் ஆய்தொடியார், பொருட் பெண்டிர், மாய மகளிர் என்று திருவள்ளுவர் வருணிக்கும் தேவரடியாள் கூட ஒரு குரு!! இந்தக் கதை பாகவதத்தில் இருக்கிறது. 2011ஆம் ஆண்டில் **The Connection between William Wordsworth and Dattatreya.**

என்ற எனது ஆங்கிலக் கட்டுரையில் கூறி இருக்கிறேன். பிங்களா என்ற விலைமாது பணத்துக்கு ஆசைப்பட்டுக் கொண்டு ஒரு வாடிக்கையாளருக்குக் காத்திருந்தாள். அவன் வரவே இல்லை. சிற்றின்பத்துக்காக இப்படிக் காத்திருக்கும் நான் எவ்வளவு நேரத்தை வீ ணடித்தேன் என்று வருந்துகிறாள். தத்தாத்ரேயர் இதைப் பார்த்து பேரின்பத்துக்கு நேரம் செலவழிப்பதே முறை என்று தெளிகிறார்.

## 3.பில்வமங்களா--சிந்தாமணி கதை

பில்வமங்களா என்பவர் கற்றறிந்த பிராமணர். வேத, இதிஹாச புராணங்களில் வல்லவர். அவருடைய தீவினைப் பயன், சிந்தாமணி என்ற விலைமாதரிடம் ஆசை கொண்டார். அவருக்காக எதையும் செய்ய சித்தம் உடையவர். ஒரு நாள் பெரும் புயல் வீ சியது அப்போது பில்வ மங்களாவுக்கு காம வேட்கை எல்லை கடந்து போனது. உடனே 'ஒரு கட்டையைப் பிடித்துக் கொண்டு' ஆற்று வெள்ளத்தில் நீந்திப்போய் மறுகரையில் உள்ள சிந்தாமணியின் வீ ட்டை அடைந்தார். அங்கே தொங்கிக் கொண்டிருந்த 'ஒரு கயிற்றைப் பிடித்து' ஜன்னல் வழியாக சிந்தாமணியின் அறையில் குதித்தார். அவர் பிடித்த "கட்டை" ஆற்றில் மிதந்து வந்த பிணம் என்பதும், அவர் பிடித்து ஏறிய "கயிறு" ஒரு மலைப் பாம்பு என்பதும் கூட அவருக்குத் தெரியவில்லை!! காதல் கண்ணை மறைத்தது! அந்தப் பெண் இவருடைய எல்லையற்ற வேட்கைக்கு ஒரு முடிவுகட்ட எண்ணீ னார் " என் மீது காட்டிய இந்தப் பேரன்பு இறைவனிடத்தில் காட்டப்பட்டால் நித்திய இன்பம், பேரின்பம், பிரம்மானந்தம் கிடைக்குமே" என்றாள். இது அவரது கண்களைத் திறந்தது. பின்னர் மாபெரும் கிருஷ்ண பக்தராகி, சம்ஸ்கிருதத்தில் கிருஷ்ண கர்ணாம்ருதம் என்ற பாடலை இயற்றினார்.

**4.அருணகிரிநாதர் கதை**

இளம் வயதில் தாய் தந்தையரை இழந்த அருணகிரி நாதர் காமாந்தகனாக மாறி ஊரையே மேய்ந்தார். இவருடைய சகோதரி இவருக்கு தாய் தந்தையர் நிலையில் இருந்து காப்பாற்றி வந்தார். எப்போது பார்த்தாலும் விலைமாதர் வீ டுகளுக்குச் செல்ல பணம் பணம் என்று கேட்டு பேயாகத் திரிந்தார். அவருடைய சகோதரி இருந்த நகை நட்டுகளை எல்லாம் இழந்தபோது, ஒரு நாள் பணம் கேட்டு வந்தார் அருணகிரி. காம வேட்கை தாங்க முடியவில்லை என்று அலறினார்." இதோ பார் என்னிடம் இருந்த எல்லா பணம் நகை நட்டுகளை எல்லாம் கொடுத்தாகிவிட்டது. இனி இருப்பது இந்த உடல்தான் ,வேண்டுமானல் அனுபவித்துக் கொள்" என்றார். அந்தச் சொற்கள் அருணகிரியின் ஞானக் கண்ணைத் திறந்தது. நான் அவ்வளவு கொடியவன் என்று நினைத்தாயா, அக்கா! இனி நான் வாழத் தகுதி இல்லாத மிருகமே என்று ஓடினார், ஓடினார் திருவண்ணாமலை கோவில் கோபுரத்தின் உச்சிக்கே ஓடினார். தற்கொலை செய்துகொள்ளும் எண்ணத்தோடு கீழே குதித்தார். அவருடைய முன்வினைப் பயன், சகோதரியின் பிரார்த்தனை, நம்முடைய நல்வினைப் பயன் எல்லாம் சேர்ந்து முருகன் ரூபத்தில் வந்து அந்த அருணகிரியை கீழே விழாமல்

ஏந்தியது. அதன் பயனாக நமக்கு 1300 திருப்புகழ் பாடல்கள் கிடைத்தன, சந்தக் கவியில் இன்று வரை அவரை மிஞ்ச தமிழில் யாரும் வரவில்லை.

## 5.ராமகிருஷ்ண பரமஹம்சர் சொன்ன கதை

எல்லோருக்கும் தெரிந்த கதை. ஆகையால் சுருக்கி வரைகிறேன். ஒரு ஊரில் ஒரு சந்யாசி வசித்தார். அவர் வீ ட்டுக்குப் பக்கத்திலேயே ஒரு விலை மகளிர் வீ டு இவருக்கு வரும் பக்தர்களைவிட அவளுக்கு வரும் வாடிக்கையாளர் அதிகம் என்பதைச் சொல்லத் தேவை இல்லை. இவருக்குக் கோபம் பொறுக்கவில்லை. அந்த விலைமாதை அழைத்து, " அடிப் பாவி! இப்படி பாவம் செய்கிறாயே! நல்வழிக்குத் திரும்பு" என்று ஞானோபதேசம் செய்தார். அந்தப் பெண்மணியோ பாவம். உடலை வைத்துப் பிழைப்பதன்றி வேறொன்றும் அறியாத அப்பாவி. ஆனால் உள்ளம் உருகியது. இறைவா என்னை இப்படி பாவம் செய்யும் இழிகுலத்தில் பிறக்க வைத்தாயே, இனியாவது என்னை கடைத்தேற்று என்று அடிமனதின் ஆழத்தில் இருந்து இறைவனை அழைத்தாள். உடலோ பாவம் செய்தது. உள்ளமோ புண்ணீ யம் செய்தது

சந்யாசியின் பார்வை தேவடியாள் வீ ட்டுப் பக்கம்தான் சரி இவளுக்குப் பாடம் புகட்ட ஒரு 'தனி வழி' உண்டு. அந்தப் பலான பேர்வழிக்கு ஒவ்வொரு வாடிக்கை வரும் போதும் ஒரு கல்லைப் போட்டுப் பாவக் குவியலைக் காட்டுவோம் என்று எண்ணினார். கற்கள் மலையாக குவிந்ததன. மீண்டும் அந்த விலைமாதை அழைத்து, பார், உன் பாவக் குவியலை என்று கல் மலையைக் காட்டீனார்.

அவளோ முன்னைவிட உறுதிபட ஆண்டவனை வேண்டி அழுதாள். அவள் ஒரு நாள் திடீரென இறந்தாள். என்ன அதிசயம்? அதே நாள் சன்யாசியும் இறந்தார். யம தூதர்கள் வந்து சந்யாசியை நரகத்துக்கு இழுத்துச் சென்றனர். வைகுண்டத்தில் வந்த விஷ்ணுவின் தூதர்கள் அந்த விலை மாதை சுவர்க்கத்துக்கு அழைத்துச் சென்றனர். சந்யாசிக்குப் பயங்கர கோபம். ஏ, எம தூதர்களே? 'அட்ரஸ்' மாறி வந்து விட்டீர்களா? நான் சுவர்க்கத்துக்கும் அவள் நரகத்துக்கும் போகவேண்டும் என்று கடிந்தார்.

தூதர்களோ அன்பரே, எங்கள் சித்ரகுப்தனின் ‘அக்கவுண்ட்’ என்றும் பிழை ஆனதில்லை. பூலோகத்தை எட்டிப் பாரும். உமது ‘உடல்’ புண்ணீயம் செய்ததால் எல்லோரும் மாலை போட்டு உமது சடலத்தை ஊர்வலமாக எடுத்துச் செல்கின்றனர். உமது உள்ளம் அனுதினமும் விலை மாதரை நினைத்தால் நாங்கள் உம்மை நரகத்துக்குக் கொண்டு செல்கிறோம். அதோ பாரும். அந்த விலை மாதின் உடலை. எல்லோரும் காறி உமிழ்ந்து நரிக்கும் நாய்க்கும் இரையாகப் போட்டுவிட்டனர். அவர் உடல் பாவம் செய்தது. உள்ளம் புண்ணியம் செய்ததால் சுவர்க்க லோக தூதர்கள் அவளை அழைத்துக் கொண்டுபோகின்றனர் என்றனர் யம கிங்கரர்கள்.

நாமும் சித்ர குப்தனின் கணக்குப் புத்தகத்தை நினைவில் கொள்வோமாக!!!

(மன்னிக்க வேண்டுகிறேன். கதையின் சுவைக்காக ராமகிருஷ்ண உபதேச மஞ்சரியில் இல்லாத சில சொற்களையும் சேர்த்து இருக்கிறேன்)

Contact swami_48@yahoo.com